සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**45 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

**10.12.2019 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## பரதநாட்டியம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே** புள்ளடியை (×) **இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** முருகனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்
(1) கும்மி (2) கோலாட்டம் (3) காவடி (4) கரகம்

**2.** மத்ஸய அவதாரத்தைக் காட்டும் ஸம்யுத ஹஸ்தத்தை அஸம்யுத ஹஸ்தமாக மாற்றினால் உண்டாகும் ஹஸ்தம்
(1) அர்த்தசந்திரன் (2) பதாகம் (3) மிருகசீர்ஷம் (4) திரிபதாகம்

**3.** 22 அட்சர எண்ணிக்கைகளை எடுத்துக்கொள்ளும் தாளம்
(1) $|_9$ O O (2) $|_9 |_9$ O O (3) $|_9$ O $|_9 |_9$ (4) $|_9$ ∪ O

**4.** சபை இலட்சணத்தில் சாஸ்திரங்கள் எதற்கு ஒப்பாகக் கூறப்படுகின்றன ?
(1) கற்பகவிருட்சத்திற்கு (2) கிளைகளுக்கு
(3) வண்டுகளுக்கு (4) மலர்களுக்கு

**5.** சிவபெருமானால் காத்தல் தாண்டவம் ஆடப்பட்ட தலம்
(1) திருநெல்வேலி தாமிரசபை (2) திருக்குற்றால சித்திரசபை
(3) வெள்ளியம்பதி ரஜிதசபை (4) திருவாலங்காட்டு இரத்தினசபை

**6.** மூக்கில் ஒரு பக்கத்திற்கு மட்டும் வட்டமாக அணியும் அணிகலன்
(1) வங்கி (2) புல்லாக்கு (3) இராக்கொடி (4) நத்து

**7.** அஷ்டபதியின் மறுபெயர்
(1) கீதகோவிந்தம் (2) கீர்த்தனை (3) ஜாவளி (4) பதம்

**8.** கண்டஜாதி மட்டியதாளமாக அமைவது
(1) $|_5 |_5$ O O (2) $|_5$ (3) $|_5$ O $|_5 |_5$ (4) $|_5$ O $|_5$

9. சப்தம் என்னும் உருப்படி அமையப்பெற்ற தாளம்
(1) திரிபுடதாளம் (2) ஏகதாளம் (3) சாபுதாளம் (4) ரூபகதாளம்

10. வட இந்தியாவிற்குரிய சாஸ்திரிய நடனம் எது ?
(1) குச்சுப்புடி (2) கதக் (3) மோகினி (4) கதகளி

11. 'கொஹோம்பகங்காரிய' என்னும் சமயச் சடங்குடன் தொடர்புடைய நடனம்
(1) ருகுணு நடனம் (2) சப்பிரகமுவ நடனம்
(3) கண்டிய நடனம் (4) கீழைத்தேய நடனம்

12. சிவனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக்கொள்ளும் தசாவதார ஹஸ்தம் எது ?
(1) நரசிம்மர் (2) பரசுராமர் (3) பலராமர் (4) வாமனர்

13. அலை போல் எழும்பியும் பாம்பு போல் நெளிந்தும் ஆடப்படும் நடனம்
(1) ஒடிசி (2) கதகளி (3) மோகினி (4) மணிப்புரி

14. பீபத்ஸ ரசத்தின் எதிர் ரசம் யாது ?
(1) ரௌத்திரம் (2) சிருங்காரம் (3) ஹாசியம் (4) பயானகம்

15. 'தாதெய்தெய்த' அடவிற்கு மரபுரீதியாக வழங்கப்பட்ட பெயர்
(1) பரவல் அடவு (2) மகுட அடவு
(3) ஊஞ்சல் அடவு (4) பாய்ச்சல் அடவு

16. ஜாதி பேதங்களினால் மாற்றமடையும் அங்கம்
(1) அனுத்ருதம் (2) த்ருதம் (3) லகு (4) புளுதம்

17. 'சக்கரவாகே' என்பதைப் புலப்படுத்தப் பிரயோகிக்கப்படும் ஹஸ்தம்
(1) அலபத்மம் (2) சூசி (3) பத்மகோசம் (4) சதுரம்

18. பஞ்சபாணங்களுள் நவமாலிகா என அழைக்கப்படுவது
(1) தாமரை (2) அல்லி (3) அசோகம் (4) மல்லிகை

19. இராம நாடக கீர்த்தனையை இயற்றியவர் யார் ?
(1) சிவானந்தம் (2) பொன்னையா
(3) அருணாசலக் கவிராயர் (4) கோபாலகிருஷ்ண பாரதியார்

20. இரு கைகளிலும் ஒரே முத்திரையைக் கொண்டு அபிநயிக்கும் தசாவதாரங்களின் எண்ணிக்கை யாது ?
(1) மூன்று (2) நான்கு (3) ஐந்து (4) ஏழு

21. பரதநாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் விறுவிறுப்பு நிறைந்த உருப்படி எது ?
(1) பதம் (2) கீர்த்தனை (3) அஷ்டபதி (4) தில்லானா

22. நடனமானது கூத்து, ஆடல், குனிப்பு போன்ற பெயர்களால் அழைக்கப்பட்ட காலப்பகுதி எது ?
(1) சங்ககாலம் (2) சங்கமருவிய காலம்
(3) பல்லவர் காலம் (4) சோழர் காலம்

23. கழியினைப் பயன்படுத்தி வாசிக்கும் வாத்தியம்
(1) உடுக்கு (2) டோல்கி (3) தபேலா (4) தவில்

24. ஜதீஸ்வரத்தின் பகுதிகளாவன முறையே,
(1) பல்லவி, அனுபல்லவி என்பனவாகும்.
(2) பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பனவாகும்.
(3) பல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம் என்பனவாகும்.
(4) அனுபல்லவி, பல்லவி, சரணம் என்பனவாகும்.

25. வியாழக் கிரகத்தைக் குறிக்கும் வடமொழிச்சொல் யாது ?
(1) குஜஹ (2) சுக்கிர (3) அங்காரஹ (4) பிரஹஸ்பதி

26. த, க, திமி, தா; என்பதன் மொத்த அட்சர எண்ணிக்கை
(1) எட்டு ஆகும்.
(2) பத்து ஆகும்.
(3) பதினொன்று ஆகும்.
(4) பன்னிரண்டு ஆகும்.

27. நடனத்திற்குரிய வர்ணமாக அமைவது
(1) பதவர்ணம்
(2) தானவர்ணம்
(3) சாகித்தியவர்ணம்
(4) ஸ்வரவர்ணம்

28. அணங்கன், மதனன், மதனவேள் என்னும் பெயர்களுக்குரியவர்
(1) மதுசூதனன் (2) மாதவன் (3) யாதவன் (4) மன்மதன்

29. ஆடை, ஆபரணங்களினால் கருத்துகளைப் புலப்படுத்தும் அபிநயம் யாது ?
(1) ஆங்கிகா அபிநயம்
(2) வாச்சிகா அபிநயம்
(3) ஆகார்யா அபிநயம்
(4) சாத்விகா அபிநயம்

30. நவக்கிரக ஹஸ்தத்தில் ராகுக்குரிய ஹஸ்தமாக அமைவது
(1) வலதுகை சர்ப்பசீரஸம், இடதுகை சூசி
(2) வலதுகை சூசி, இடதுகை சர்ப்பசீரஸம்
(3) வலதுகை சூசி, இடதுகை பதாகம்
(4) வலதுகை பதாகம், இடதுகை சூசி

31. பந்து விளையாடுவதைக் குறிக்கும் ஹஸ்தம்
(1) அலபத்மம் (2) பத்மகோசம் (3) முகுளம் (4) புஷ்பபுடகம்

32. தூய நிருத்த வகையைச் சேர்ந்த உருப்படி யாது ?
(1) பதம் (2) வர்ணம் (3) சப்தம் (4) ஜதீஸ்வரம்

33. 'பாதசாரிகா' என்னும் பாதநிலை
(1) நிற்றல் ஆகும்.
(2) பாய்தல் ஆகும்.
(3) நடத்தல் ஆகும்.
(4) சுற்றிவருதல் ஆகும்.

34. பின்வருவனவற்றுள் ஆண்கள், தலையில் ஓலைத்தொப்பி அணிந்து ஆடும் கிராமிய நடனம் எது ?
(1) சுளகு நடனம் (2) மீனவ நடனம் (3) வாள் நடனம் (4) வேடுவ நடனம்

35. பாசஹஸ்தம் பிடித்து நாட்டியாரம்பத்தில் மிருகசீர்ஷம் பிடித்தால் உண்டாகும் பாந்தவ்ய ஹஸ்தம்
(1) சக்களத்தி (2) மாமியார் (3) மருமகள் (4) தம்பதி

- **36** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

36. 'இசையியல்' என்னும் இலக்கண நூல் ...................... அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது.
(1) க. பொன்னையாபிள்ளை
(2) வழுவூர் இராமையாபிள்ளை
(3) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(4) அருணாசலக்கவிராயர்

37. டி. என். சுவாமிநாதபிள்ளை, டி. ஆர். மகாலிங்கம் போன்றோர் ...................... வாசிப்பதில் பிரபலமானவர்களாவர்.
(1) வயலின் (2) வீணை (3) புல்லாங்குழல் (4) மிருதங்கம்

38. கோவலன் கூத்து ...................... மாவட்டத்தில் பயில்நிலையில் உள்ளது.
(1) யாழ்ப்பாணம் (2) மட்டக்களப்பு (3) மன்னார் (4) முல்லைத்தீவு

39. நட்டுவாங்க தாளத்தின் கயிறானது ...................... ஆகியவற்றைக் குறித்து நிற்கின்றது.
(1) சக்தி, சிவம்
(2) ராகு, கேது
(3) சூரியன், சந்திரன்
(4) லக்ஷ்மி, சரஸ்வதி

40. சீயமங்கலம் குகையிலுள்ள நடராஜர் சிலையானது ...................... காலப்பகுதிக்கு உரியதாகும்.
(1) பல்லவர் (2) நாயக்கர் (3) பாண்டியர் (4) ஐரோப்பியர்

**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 S I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2019

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

## භරත නැටුම් II

※ **පළමුවැනි** ප්‍රශ්නය හා අනෙකුත් ප්‍රශ්නවලින් **හතරක්** ද තෝරා ගෙන ප්‍රශ්න **පහකට** පමණක් පිළිතුරු සපයන්න.

**1.** පහත සඳහන් ප්‍රශ්නවලට කෙටි පිළිතුරු සපයන්න.

(i) "වික්නානාම් නාශනම්……" යන්නෙන් ආරම්භ වන නර්තන ශ්ලෝකය කුමක් ද?

(ii) විෂ්ණු දෙවියන් භූමිය පසාරු කොට භූමි පතුලෙහි ගින්දර සෙවීම සඳහා භාවිත කළ අවතාරය කුමක් ද?

(iii) සංගීත නාල්වර් (තන්ජාවූර් සහෝදරයන්) සඳහා තුලජා මහාරජු විසින් පිරිනමන ලද ගෞරව නාමය කුමක් ද?

(iv) දේසිංගු රාජු රජුගේ ජීවන තොරතුරු ගයමින් ගමන් ගත් වීදි ගායකයින් වාදනය කළ සංගීත භාණ්ඩය කුමක් ද?

(v) "තතන තත තත තජොනු ජොනු ජොනු ………" යනුවෙන් ආරම්භ වන නර්තන අංගය කුමක් ද?

(vi) කඩුව ඇතෙහි රඳවා ගනිමින් රඟ දක්වන කුත්තු විශේෂය කුමක් ද?

(vii) උදාසීනකම පෙන්වීම සඳහා ශිරෝ භේදයෙහි එන අභිනය කුමක් ද?

(viii) යශෝදා හා ක්‍රිෂ්ණා තුළින් විදහා දැක්වෙන අභිනය කුමක් ද?

(ix) උඩුක්කු හැඳින්වීම සඳහා යෙදෙන සමාන නාම **දෙකක්** ලියන්න.

(x) නිරුත්ති අංගය සඳහා උදාහරණ **දෙකක්** දක්වන්න.

**2.** (i) අඩව් යන්න හඳුන්වන්න.

(ii) මකුට අඩව් නම් කොට ඒවායේ තාල රූප, නර්තනමය වාචිකය හා භාවිත වන හස්ත මුද්‍රා ලියා දක්වන්න.

(iii) ඔබ කැමති මකුට අඩව්වක් ලය කාල ප්‍රමාණ තුනට ලියා දක්වන්න.

**3.** පහත සඳහන් හස්ත නාමවලට අදාළ විනියෝග, ඒවායේ ශ්ලෝක හා අර්ථ සමග ලියා දක්වන්න.

(i) හම්සාස්සියම (ii) පුෂ්පපුට (iii) අවහිත්ත

**4.** තන්ජයි පෙරුම් කෝවිල්, ඓතිහාසික සිද්ධාන්තය නිරූපණය කරන පාරම්පරික සංකේතය වේ.

(i) එම කෝවිල නිර්මාණය කළ කාලපරිච්ඡේදය හා එය නිර්මාණය කළ රජුගේ නම ලියා දක්වන්න.

(ii) ඉහත (i) හි සඳහන් රජු හඳුන්වන ගෞරව නාම **හතරක්** සඳහන් කරන්න.

(iii) එම ගොඩනැගිල්ලේ නිර්මාණාත්මක ලක්ෂණ සඳහන් කර, මෙම කෝවිල භරත නාට්‍යම් සම්ප්‍රදායේ පැවැත්මට දැක් වූ දායකත්වය උදාහරණ දක්වමින් විස්තර කරන්න.

**5.** පහත සඳහන් ඒවා පිළිබඳ කෙටි සටහන් ලියන්න.

(i) වැදි නැටුම (ii) තීරුමාණම් (iii) කිංකිණි ලක්ෂණ

**6.** (i) භරත නාට්‍යම් සම්ප්‍රදායේ ප්‍රධාන පසුබිම් වාද්‍ය භාණ්ඩය නම් කරන්න.

(ii) ඉහත (i) හි සඳහන් වාද්‍ය භාණ්ඩයේ ව්‍යුහය හා එය භරත සම්ප්‍රදායේ දී භාවිතයට ගැනෙන අයුරු විස්තර කරන්න.

(iii) එහි රූප සටහනක් ඇඳ කොටස් නම් කරන්න.

**7.** ඔබ දුටු නෘත්‍ය නාටකයක චතුර්විධ අභිනය භාවිත කර ඇති අයුරු විස්තර කරන්න.

※※※

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 45 | විෂයය<br>பாடம் | பரத நாட்டியம் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 1 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 4 | 33. | 3 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 3 | 15. | 1 | 25. | 4 | 35. | 1 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 3 | 36. | 1 |
| 07. | 1 | 17. | 1 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 4 | 18. | 4 | 28. | 4 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 3 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 2 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25/40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25/40

# வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

## முதலாம் பகுதி வினாவுக்கான குறிக்கோள்கள்

1. முருகனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனத்தினை அறிவார்.
2. மட்சய அவதாரத்தை காட்டும் ஸம்யுத ஹஸ்தம், அஸம்யுத ஹஸ்தமாக உண்டாகும் ஹஸ்தங்களை அறிவார்.
3. 22 அட்சரங்களை எடுத்துக்கொள்ளும் தாளத்தினை அறிவார்.
4. சபை இலட்சணத்தில் சாஸ்திரங்கள் எதற்கு ஒப்பாகும் என தெரிந்து கொள்வர்.
5. சிவபெருமானால் காத்தல் தாண்டவம் ஆடப்பட்ட தலத்தினை அறிந்து கொள்வார்.
6. மூக்கில் ஒரு பக்கத்திற்கு மட்டும் வட்டமாக அணியும் அணிகலனை அறிந்து கொள்வார்.
7. அஸ்டபதியின் மறுபெயரினை தெரிந்து கொள்வார்.
8. கண்டஜாதி மட்டிய தாளமாக அமையும் தாளத்தினை அறிவார்.
9. சப்தம் என்னும் உரு.ப்படி அமையப் பெற்ற தாளத்தினை அறிவார்.
10. வட இந்தியாவிற்குரிய சாஸ்திரிய நடனத்தினை அறிந்து கொள்வார்.
11. “கொஹோம்ப கங்காரிய” என்னும் சமய சடங்குடன் தொடர்புடைய நடனத்தினை அறிவார்.
12. சிவனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக் கொள்ளும் தசாவதார ஹஸ்தத்தினை அறிவார்.
13. அலை போல் எழும்பியும், பாம்பு போல் நெளிந்தும் ஆடப்படும் நடனத்தினை அறிவார்.
14. பீபத்ஸ ரசத்தின் எதிர் ரசத்தினை அறிவார்.
15. “தாதெய்தெய்த” அடவிற்கு மரபு ரீதியாக வழங்கப்பட்ட பெயரினை அறிவார்.
16. ஜாதி பேதங்களினால் மாற்றமடையும் அங்கத்தினை அறிவார்.
17. “சக்கரவாகே” என்பதைப் புலப்படுத்தப் பிரயோகிக்கும் ஹஸ்தத்தினைத் தெரிந்து கொள்வார்.
18. பஞ்ச பாணங்களுள் நவ மாலிகா என எதனை கூறுவர் என்பதனை அறிந்து கொள்வார்.
19. இராம நாடகக் கீர்த்தனையை இயற்றியவரை அறிவார்.
20. இரு கைகளிலும் ஒரே முத்திரையைக் கொண்டு அபிநயிக்கும் தசாவதாரங்களின் எண்ணிக்கையினை தெரிந்து கொள்வார்.
21. பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் விறுவிறுப்பு நிறைந்த உருப்படியினைத் தெரிந்து கொள்வார்.
22. நடனமானது கூத்து, ஆடல், குனிப்பு போன்ற பெயர்களால் அழைக்கப்பட்ட காலப் பகுதியினைத் தெரிந்து கொள்வார்.
23. கழியினைப் பயன்படுத்தி வாசிக்கும் வாத்தியத்தினை அறிவார்.
24. ஜதீஸ்வரத்தின் பகுதிகளான பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற ஒழுங்கு முறையினை அறிந்து கொள்வார்.
25. வியாழக் கிரகத்தைக் குறிக்கும் வடமொழிச் சொல்லினை அறிவார்.
26. த, க, திமி, தா; என்பதன் மொத்த அட்சர எண்ணிக்கையினை அறிந்து கொள்வர்.
27. நடனத்திற்குரிய வர்ணம், பதவர்ணம் என்பதனை அறிந்து கொள்வார்.
28. அணங்கன், மதனன், மதனவேள் என்னும் பெயருக்குரியவரை தெரிந்து கொள்வார்.

29.ஆடை ஆபரணங்களினால் கருத்தைப் புலப்படுத்தும் அபிநயத்தினை அறிந்து கொள்வார்.

30.நவக்கிரக ஹஸ்தத்தில் இராகுக்குரிய ஹஸ்தங்களை அறிந்து கொள்வார்.

31. பந்து விளையாடுவதைக் குறிக்கும் ஹஸ்தத்தினை அறிந்து கொள்வார்.

32.தூய நிருத்த வகையைச் சேர்ந்த உருப்படியினை அறிவார்.

33 "பாதசாரிகா" என்னும் பாத நிலை நடத்தலைக் குறிக்கும் என அறிந்துக் கொள்வார்.

34.ஆண்கள் தலையில் தொப்பி அணிந்து ஆடும் கிராமிய நடனத்தினை அறிந்து கொள்வார்.

35.பாசஹஸ்தம் பிடித்து நாட்டியாரம்பத்தில் மிருகசீர்ஷம் பிடித்தால் உண்டாகும் பாந்தவ்ய ஹஸ்தத்தினை அறிந்து கொள்வார்.

36."இசையியல்" என்னும் இலக்கண நூலை எழுதியவரை அறிந்து கொள்வார்.

37.டி. என். சுவாமிநாதப்பிள்ளை, டி. ஆ.ர். மகாலிங்கம் போன்றோர் புல்லாங்குழல் வாசிப்பதில் பிரபல்யமானோர் என அறிந்து கொள்வார்.

38."கோவலன் கூத்து" முல்லைத்தீவு மாவட்டத்தில் பயில் நிலையில் உள்ளதனை அறிவார்.

39.நட்டுவாங்கத் தாளத்தின் கயிறானது இராகு, கேதுவை குறித்து நிற்கின்றது என்பதனை அறிவார்.

40.சீய மங்கலம் குகையிலுள்ள நடராஜர் சிலையானது பல்லவர் கால பகுதிக்குரியதாகும் என்பதனை அறிந்து கொள்வார்.

## பகுதி II

### முதலாம் வினாவுக்கான குறிக்கோள்கள்

i. "விக்னானாம் நாஷனம்...." என்னும் ஸ்லோகத்தினை அறிந்து கொள்வார்.

ii. சோதிப் பிளம்பின் அடியினைத் தேடுவதற்காக விஸ்ணு எடுத்த அவதாரத்தை தெரிந்து கொள்வார்.

iii. தஞ்சாவூர் சகோதரர்களுக்கு துளஜா மகாராஜா அளித்த பட்டத்தினை தெரிந்து கொள்வார்.

iv. தெருப் பாடகர்கள் தேசிங்குராசன் கதைகள் நிகழ்த்துகையில் வாசிக்கும் வாத்தியம் யாதென அறிந்து கொள்வார்.

v. தத்தன தன தன தஜொணு ஜொணு ஜொணு எனத் தொடங்கும் உருப்படியை அறிந்து கொள்வார்.

vi. கையில் வாளேந்தி ஆடப்படும் கூத்தினை இனங்காண்பார்.

vii."அலட்சியம்" போன்று பாவனை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சிரோபேதத்தினை அறிந்துக் கொள்வார்.

viii.யசோதை கிருஸ்ணனிடம் வெளிப்படுத்திய பாவனைத்தினைத் தெரிந்து கொள்வார்.

ix. உடுக்கு வாத்தியத்தின் மறுபெயர்களைத் தெரிந்து கொள்வார்.

x. நிருத்திய உருப்படிகளுக்கு உதாரணங்களைத் தெரிந்து கொள்வார்.

### இரண்டாம் வினாவுக்கான குறிக்கோள்கள்

1. அடவு என்ற சொற்பதத்தினை விளங்கிக் கொள்வார்.
2. மகுட அடவினை இனங்காண்பார், அவற்றின் தாளம், நடனச்சொற்கட்டு, பிரயோகிக்கும் ஹஸ்தங்கள் என்பவற்றையும் விளங்கிக் கொள்வார்.
3. மகுட அடவினை திரிகாலத்திலும் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுவதற்குத் தெரிந்து கொள்வார்.

**மூன்றாம் வினாவுக்கான குறிக்கோள்கள்**

1. அசம்யுத, ஸம்யுத ஹஸ்தங்களின் விநியோகங்களை விளங்கிக் கொள்வர்.

**நான்காவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

1. தஞ்சைப் பெருங்கோயில் கட்டப்பட்ட காலப்பகுதி, கட்டிய மன்னன், அம்மன்னனுக்குரிய விருதுப் பெயர்கள் அக்கோயிலின் அமைப்பு முறை, பரதக்கலைக்கலைக்கு இவ்வாலயம் ஆற்றிய பங்களிப்பு என்பவற்றினைத் தெரிந்து கொள்வார்.

**ஐந்தாவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

1. வேடுவ நடனம், தீர்மானம், கிண்கிணி போன்றவற்றினைத் தெரிந்து கொள்வார்.

**ஆறாவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

1. பரதநாட்டிய கச்சேரி முறையில் பிரதானமான பக்கவாத்தியமாக இடம்பெறும் தாள வாத்தியம் பற்றியும் அதன் அமைப்பு முறை, கச்சேரியில் அதன் பயன்பாடு, அவ்வாத்தியத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பதற்கு தெரிந்து கொள்வார்.

**ஏழாவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

1. பார்த்து இரசித்த நாட்டிய நாடகம் ஒன்றினை நான்கு விதமான அபிநயங்களின் ஊடாக விளக்க தெரிந்துக் கொள்வார்.

# பரத நாட்டியம் II

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "விக்னானாம் நாஷணம்..." என ஆரம்பிக்கும் நாட்டிய ஸ்லோகம் யாது ?

(ii) சோதிப்பிழம்பின் அடியினைத் தேடுவதற்காக விஷ்ணு எடுத்த அவதாரத்தைக் குறிப்பிடுக.

(iii) தஞ்சாவூர் சகோதரர்களுக்கு துளஜா மகாராஜா அளித்த பட்டம் யாது ?

(iv) தெருப் பாடகர்கள், தேசிங்கு ராசன் கதைகள் நிகழ்த்துகையில் வாசிக்கும் வாத்தியம் யாது ?

(v) "தத்தன தனதன தஜொனு ஜொனு ஜொனு..." எனத் தொடங்கும் உருப்படி யாது ?

(vi) கையில் வாளேந்தி ஆடப்படும் கூத்து எது ?

(vii) 'அலட்சியம்' போன்று பாவனை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சிரோ பேதம் யாது ?

(viii) யசோதை, கிருஷ்ணனிடம் வெளிப்படுத்திய பாவம் யாது ?

(ix) உடுக்கு வாத்தியத்தின் மறுபெயர்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) நிருத்திய உருப்படிக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

| | |
|---|---|
| i. புஷ்பாஞ்சலி | (01 புள்ளி) |
| ii. வராகம் | (01 புள்ளி) |
| iii. சங்கீத சாகித்திய பரத சிரேஸ்டர் | (01 புள்ளி) |
| iv. உடுக்கு / டமருகம் | (01 புள்ளி) |
| v. ஸப்தம் | (01 புள்ளி) |
| vi. தென்மோடி | (01 புள்ளி) |
| vii.பராவிருத்தம் | (01 புள்ளி) |
| vii.வாத்சல்ய பாவம் | (01 புள்ளி) |
| ix. டமருகம் / துடி / இடை சுருங்கிய பறை / இருமுக தோற்கருவி | (02 புள்ளி) |
| x. ஸப்தம் / பதம் / கீர்த்தனை / அஷ்டபதி / ஜாவளி | (02 புள்ளி) |

**மொத்தம் 12 புள்ளிகள்**

**2.** (i) அடவு என்றால் என்ன ?

(ii) மகுட அடவுகளைக் குறிப்பிட்டு, அவற்றின் தாளம், நடன சொற்கட்டு, பிரயோகிக்கப்படும் ஹஸ்தங்கள் என்பவற்றைத் தருக.

(iii) நீர் விரும்பிய மகுட அடவு ஒன்றினை திரிகாலங்களிலும் தாள, அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

2. i. **அடவு**

- தலை, கால், சரீர அசைவுகள் ஒருங்கே ஒரே நேரத்தில் இணைந்து தாள சீர்ப் பிரமாணத்திற்கேற்ப அமைக்கப்பட்டது அடவு எனப்படும்.
- ஒவ்வொரு அடவிலும் ஸ்தானகபேதம், சாரிபேதம், நிருத்த ஹஸ்தம், கண் அசைவு, தலை அசைவு, கழுத்தசைவு என்பன அடங்கி இருக்கும்.
- அடவுகள் விளம்ப, மத்திம, துரித காலங்களில் செய்யலாம்.
- அடவுகளில் வன்மையான அடவு, மென்மையான அடவு, மெய்யடவு போன்ற வகைகள் உண்டு.

(2 புள்ளிகள்)

ii. **மகுட அடவுகள்**

- கிடதகதரிகிடதொம்
- ததிங்கிணதொம் (01 புள்ளி)

- தாளம் – ரூபகம் (01 புள்ளி)

- நடனச் சொற்கட்டு

தெய் திதி தெய்

தெய் தெய் திதி தெய்

தெய் தெய் தெய் திதி தெய் (01 புள்ளி)

- பிரயோகிக்கும் ஹஸ்தம்

கிடதகதரிகிடதொம் – பதாகம், அலபத்மம்

ததிங்கிணதொம் – பதாகம், திரிபதாகம் (01 புள்ளி)

(4 புள்ளி)

$0_2$ $/_4$

iii. **1ஆம் காலம்**

கிடதக தரிகிட / தொம்,; த, க, கிடதக தரிகிட //

தொம்,; த, க, / தி, கு, கிடதக தரிகிட தொம்,; //

**2ஆம் காலம்**

கிடதக தரிகிட தொம், தக / கிடதக தரிகிட தொம், தகதிகு கிடதக தரிகிட தொம், //

**3ம் காலம்**

கிடதக தரிகிட தொம், தக

கிடதக தரிகிட தொம், தக / திகு கிடதக தரிகிடதொம், கிடதக தரிகிட

தொம், தக கிடதக தரிகிட தொம், தக திகு

கிடதக தரிகிட தொம், //

$0_2$ $/_4$

**1 ஆம் காலம்**

த, திங், கி, ண, / தொம்,; த, க, த, திங், கி, ண, //

தொம்,; த, க, / தி, கு, த, திங், கி, ண, தொம்,; //

**2 ஆம் காலம்**

ததிங்கிணதொம், தக / ததிங்கிண தொம், தக திகு ததிங்கிண தொம், //

**3 ஆம் காலம்**

ததிங்கிண தொம் தக /

ததிங்கிண தொம் தக / திகு ததிங்கிண தொம் ததிங்கிண தொம்

தக ததிங்கிண தொம் தக திகுததிங் கிண தொம் //

(விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்) (6 புள்ளி)

**மொத்தம் 12 புள்ளிகள்**

**3.** பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.
(i) ஹம்சாசியம் (ii) புஷ்பபுடகம் (iii) அவகித்தம்

3.

i. **ஹம்ஸாஸ்ய ஹஸ்த விநியோகம்**

**ஸ்லோகம்:**
மாங்கல்யே சூத்ரபந்தேச உபதேச விநிஸ்சயே /
ரோமாஞ்சே மௌதிகாகௌச தீபவர்திப் ப்ரசாரனே //
நிகசே மல்லிகாகௌாச சித்ரே தல்லேகனே ததா /
தம்ஸேச ஜலபந்தேச ஹம்ஸாஸ்யோ யுஜ்ஜதேகரஹ //

**கருத்து:**

| | | |
|---|---|---|
| மாங்கல்யே | – | மாங்கல்யம் |
| சூத்ரபந்தேஷ | – | கழுத்தில் தாலி கட்டுதல் |
| உபதேஷ | – | அறிவுரை கூறுதல் |
| விநிஸ்சயம் | – | நிச்சயம் செய்தல் |
| ரோமோஞ்சே | – | புல்லரித்தல் |
| மௌக்திகாதௌச | – | முத்துக்கள் |
| தீபவர்த்திப் ப்ரஸாரனே | – | விளக்குத் திரியைத் தூண்டல் |
| நிகஷே | – | உரைகல் |
| மல்லிகாதௌச | – | மல்லிகை |
| சித்ரே | – | ஓவியம் |
| தல்லேகனேச | – | சித்திரம் தீட்டுதல் |
| தம்ஸேச | – | கடித்தல் |
| ஜலபந் தேச | – | அணைக்கட்டு |

ii. **புஷ்ப புடஹஸ்த விநியோகம்**

**ஸ்லோகம்:**
நீராஜன விதௌ வாரி பலாதி க்ரஹனே பிச /
ஸந்தியாயம் அர்க்ய தானேச மந்தர புஷ்பேச நியுஜ்யதே //

**கருத்து:**

| | | |
|---|---|---|
| நீராஜன விதௌ | – | கடவுளுக்கு கற்பூர தீபம் காட்டல் |
| வாரி லாதி க்ரஹனே | – | தண்ணீர் பழங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளல் |
| ஸந்தியாயம் அர்க்ய தானேச | – | சந்தியா காலங்களில் தெய்வங்களுக்கு நைவேத்தியம் கொடுத்தல் |
| மந்தர புஷ்பேச | – | மந்திரசக்தியூட்டப்பட்ட மலர் |

iii. **அவஹித்த விநியோகம்**

**ஸ்லோகம்:**

ஷ்ருங்கார நடனே சைவ லீலா கந்துக தாரணே /
குஜார்த்தே யுஜ்யதே ஸோயம் அவஹித்தஹ் கராஈரிதஹ //

**கருத்து:**

ஷ்ருங்கார நடனேசைவ - மகிழ்ச்சியில் நடனமாடுவது
லீலா கந்துக தாரணே - பந்துகளுடன் விளையாடல்
குஜார்த்தே - மார்பு

(3 × 4 = 12 புள்ளிகள்)

ஸ்லோகம் எழுதியிருப்பின் 02 புள்ளிகளும் கருத்து மட்டும் எழுதியிருப்பின் 02 புள்ளிகள் வழங்கவும் அல்லாதவிடத்து விடைக்கேற்ப புள்ளிகள் வழங்கவும்.

**4.** வரலாற்றுச் சிறப்புகள் பலவற்றைக் கொண்டமைந்த தஞ்சைப் பெருங்கோயில் தமிழரின் பாரம்பரியச் சின்னமாக விளங்குகின்றது.

(i) தஞ்சைப் பெருங்கோயில் கட்டப்பட்ட காலப்பகுதியையும் அதனைக் கட்டுவித்த மன்னனின் பெயரையும் எழுதுக.

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட மன்னனுடைய விருதுப் பெயர்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) இக்கோயிலின் அமைப்புமுறை பற்றியும் பரதக்கலைக்கு இந்த ஆலயம் எவ்வாறு பங்களிப்புச் செய்து வருகின்றது என்பதனையும் உதாரணங்கள் மூலம் விளக்குக

i. - வரலாற்றுச் சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டமைந்த தஞ்சைப் பெரும் கோவில் தமிழரின் பாரம்பரிய சின்னமாக விளங்குகின்றது.
- கி.பி 10ம் நூற்றாண்டில் (சோழர் காலத்தில்) கட்டப்பட்டது.
- இராஜராஜ சோழ மன்னன் (02 புள்ளிகள்)

ii. - பாண்டிக் குலாசனி
- சத்திரிய சிகாமணி
- கேரளாந்தகன்
- அருண்மொழித் தேவன்
- சிவபாத விருதயர் (04 புள்ளிகள்)

iii. **அமைப்பு முறை**

- தென்னாட்டுக் கோவில்களில் மிகவும் உயர்ந்த கோபுரம் கொண்டமைந்தது ( அதனால் இக் கோவில் பெரிய கோவில் என அழைக்கப்பட்டது)
- இக்கோவில் சிகரத்தின் உச்சியில் 12 அடி உயரமுடைய கலசம் உள்ளது.
- இக்கோவிலின் முக்கிய கட்டடம் 150 அடி நீளம் கொண்டது.
- இக்கோவிலின் பெரிய லிங்கத் திருமேனியின் உயரம் 13 அடி
- இக்கோவிலின் விமானம் எகிப்திய பிரமிட்டுக்களைப்போல கூர் நுனிக் கோபுரமாக அமைந்துள்ளது.
- இக்கோவில் தாழ்வாரம், நந்தி மண்டபம், கருவூர் தேவர் கோவில், சுப்பிரமணிய கோவில் என்பன பிற்காலத்தில் கட்டப்பட்டவை.
- இங்குள்ள நந்தி 14 மீற்றர் உயரம், 7 மீற்றர் நீளம், 3 மீற்றர் அகலம் கொண்ட ஒரே கல்லால் ஆனது.
- 216 அடி உயரமான கோவில் விமானம் முழுவதும் செப்புத் தகடுகளைப் போட்டு அதன்மேல் பொன் வேயப்பட்டது.
- மாறுபாடான கோவில் அமைப்பினைக் கொண்டிருப்பதனால் யுனஸ்கோ நிறுவனம் இக்கோயிலை பாரம்பரிய சின்னமாக பிரகடனப்படுத்தி உள்ளது.
- இந்திய மண்ணில் திகழ்ந்த ஒரே ஒரு பொற்கோவில் எனவும் இக்கோவில் அழைக்கப்படுகிறது.

**பரதக் கலைக்கு இக்கோவிலின் பங்களிப்பு**

- இக்கோவிலின் கற்றூண்களில் நடன மங்கைகளின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது
- ஸ்ரீவிமானத்தின் 2 ஆம் தளத்தில் நாட்டியத்தின் 108 கரணங்களில் 81 கரண சிற்பங்கள் நடராஜர் ஆடிக் காட்டுவதுபோல் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நாட்டியத்திற்காக தனி மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது
- 407 நாட்டிய நங்கையரும் 7 நட்டுவனார்களும் இக்கோவிலில் நடனக் கலையை வளர்க்க நியமிக்கப்பட்டிருந்தனர்.
- கோவில் பூசை வேளைகளில் நாட்டியம் இடம்பெற்றிக்கிறது.
- இக்கோவிலின் அன்றாட கருமங்களை செய்வதற்கு பூசகர்கள், சிற்பிகள், தேவார ஓதுவார்கள், இசை வாணர்கள், நடனமாதர்கள், பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.
- இக்கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்களில் நடன நிகழ்வுகள் இடம்பெறுகின்றது.
- சுவாமி வீதி உலா வரும்போது நவசந்தி நாட்டியம் இடம்பெறுகின்றது.
- இக்கோவிலின் 1000ம் ஆண்டு நிகழ்வின்போது தஞ்சை மாநகரில் கலாநிதி பத்மா சுப்பிர மணியத்தின் தலைமையில் பரதநாட்டிய கலைஞர்கள் கலந்து கொண்ட மாபெரும் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.
- கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை, இசை மற்றும் நடனக்கலைகள் இவை அனைத்தும் ஒன்றிணைந்த கோவிலாக தஞ்சைப் பெருங்கோவில் திகழ்கின்றது.
- தமிழக வரலாறு, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவை பொதிந்துள்ள கலைப் பொக்கிசம் இக்கோவில் எனில் மிகையாகாது.

(06 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

**5.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வேடுவ நடனம் (ii) தீர்மானம் (iii) கிண்கிணி இலட்சணம்

## (i) வேடுவ நடனம்

- வேட்டையைச் சித்திரிக்கும் ஆடல் வகையாகும்
- வேடுவர்கள் வாழும் சூழலையும் அவர்களின் பழக்க வழக்கங்களையும் கலை, கலாசாரங்களையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது.
- மிருகங்களை வேட்டையாடும் நுட்பத்திறன்களையும் இவர்கள் நன்கு அறிந்து செயற்படுவார்கள்.
- ஆண்கள், பெண்கள் இலை, குழை, தழைகளால் ஆடைகளை அணிவதோடு மிருகங்களின் தோலினையும் அணிவார்கள்.
- கையில் வில்லும் அம்பும் காணப்படும்
- இசைக் கருவிகளாக பறை, புத்தளிப்புக் கருவிகள் பயன்படுத்தப்படும்

(04 புள்ளி)

## (ii) தீர்மானம்

- லயப்பிடிப்புடன் கூடிய சொற்கட்டு வடிவமே தீர்மானமாகும்
- முழுக்க முழுக்க அவை ஜதிகளால் ஆக்கப்பட்ட அடவுகளைக் கொண்டது
- தாளக் கட்டுப்பாட்டுடன் விறுவிறுப்புடன் ஆடுவது தீர்மானமாகும்
- பரத நாட்டியத்திற்குரிய பத வர்ணத்தில் முக்கிய இடம்பெறுகிறது.
- விளம்ப, மத்திம, துரித காலங்களில் ஆடப்படும்
- ததிங்கிணதொம், கிடதகதரிகிடதொம் எனும் மகுட அடவுடன் தீர்மானம் முடிவுறும்.

(04 புள்ளி)

## (iii) கிண்கிணி

**வடமொழி ஸ்லோகம்**

ஸ்ஸ்வராஸ்ச ஸ்ரூபாஸ்ச ஸூக்ஷ்மா நட்க்ஷத்திர தேவதாஹ /
கிண்கிண்யஹ காம்ஸ்யரசிதா ஏகை காங்குலி காந்தரம் //
பத்நீயாண் நீலஸூத்ரேண க்ரந்தி பிஸ்சத்ருடம் புனஹ /
ஸதத்வயம் ஸதம்வாவி பாதயோா் நாட்டிய காரணீ //

**கருத்து**

நல்ல ஒளி உள்ளதாகவும், நல்ல வடிவானதாகவும் நுண்ணிய வேலைப்பாடுடையதாகவும் நட்சத்திரங்களை காவல் தெய்வமாகக் கொண்டதுமான பாத சலங்கை வெண்கலத்தால் ஆனதாகவும் ஒரு அங்குல இடைவெளி உடையதாகவும் நீல நிற நூலினால் உறுதியாக 100 அல்லது 200 சலங்கைகளை திருப்பக் கட்டப்பட்டனவாக இரு பாதங்களிலும் நாட்டியப் பெண் சலங்கையை அணிந்து கொள்ள வேண்டும். வெண்கலம், செம்பு, வெள்ளி இம்மூன்றினுள் ஒன்றால் கிண்கிணி செய்யப்பட்டிருக்கும்.

**தமிழ் ஸ்லோகம்**

வெண்கலம் செப்பு மற்ற வெள்ளியின் மூன்றில் ஒன்றால்
பங்கிய நஞ்சு ரங்கன் பலுகவே அழகாய்ச் செய்த
கிண்கிணி தனக்குத் தாரா கணம் அதி தெய்வ மாங்க
ருங்கயி றதனிற் கோத்திட்டுறுதியாய் முடிச்சைப் போடே

**கருத்து**

வெண்கலம், செம்பு, வெள்ளி இம் மூன்றினுள் ஒன்றால் கிண்கிணி செய்யப்படும் இதற்கு அதி தெய்வம் தாரா கணம். இதனைக் கறுப்பு நிறக் கயிற்றால் கோத்து முடிப்புப் போடவேண்டும். கால் ஒன்றிக்கு 200 வீதம் கச்சை கட்டி அணிவது நல்லது அல்லது வலது காலில் 100 உம் இடது காலில் 100 மாக கட்டி ஆடலாம்.

(04 புள்ளி)

அல்லது

- கிண்கிணி என்பது சலங்கையை குறிக்கும்
- இது உருண்டை வடிவம் கொண்டது
- ஒவ்வொரு சலங்கை முத்துக்களுக்குமிடையே ஒரு அங்குல இடைவெளிவிட்டு கட்டப்பட்டிருக்கும்
- பழங்காலத்தில் இதனை கயிறுகளில் கோர்த்தே கட்டியிருந்தனர்
- சலங்கைகள் அவரவர் வயதிற்கேற்ற அளவிலேயே அணிய வேண்டும்
- சலங்கைகளின் நாதமானது செவிக்கு இனிமையைத் தருவதுடன் பாட்டின் தாளத்தினையும் லயத்தினையும் நிர்ணயிக்க உதவுகிறது.
- அரங்கேற்றத்தின் முன்னர் " சலங்கை பூஜை செய்வது ஒரு முறையாகும்
- சலங்கைகளை புனிதமான இடங்களில் வைப்பது அவசியம்
- கிணிகிணியின் அதி தெய்வம் தாராகணம் (நட்சத்திரமாகும்).

(விடைக்கேற்ப புள்ளிகள் வழங்கவும்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

**6.** (i) பரதநாட்டிய கச்சேரி முறையில் பிரதான பக்கவாத்தியமாக இடம்பெறும் தாளவாத்தியம் எது ?
(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட வாத்தியத்தின் அமைப்பு முறை பற்றியும் பரதநாட்டியக் கச்சேரியில் அதன் பயன்பாடு பற்றியும் விளக்குக.
(iii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை வரைந்து, அதன் பாகங்களைப் பெயரிடுக.

i. மிருதங்கம் (02 புள்ளிகள்)

ii. **மிருதங்கத்தின் அமைப்பு முறை**


- மிருதங்கமானது தென்னிந்திய நடன கச்சேரியில் முக்கியத்துவம் வாய்ந்தது
- மிருதங்கம் என்னும் சொல் "கழி மண்" அமைப்பு எனப் பொருள்படும்
- மிருதங்க வாத்தியத்தினை லய வாத்தியம் எனவும் அழைப்பர்
- மிருதங்கமானது நடுப்பாகம் பருத்தும் இரு பக்கங்களும் குறுகியும் காணப்படும்
- வலது பக்கம் வலந்தலை எனவும் இடப்பக்கம் இடந்தலை எனவும் அழைக்கப்படும்.
- மிருதங்கத்தின் நடுப்பகுதி முக்கிய பலா, தென்னை, கருங்காலி, சந்தணம் ஆகிய ஏதோ ஒரு மரத்தினால் ஆக்கப்பட்டு இரு புறமும் தோலினால் மூடப்பட்டு இருப்பதனால் "தோல் வாத்தியம்" என்னும் பிரிவிற்குள் அடக்கப்படுகிறது.

- மிருதங்கத்தின் நீளமானது சுமார் 2 அடிகளாகவும் இடப்பக்கம் சுமார் 8 அங்குல விட்டத்தையும் வலப்பக்கம் சுமார் 7 அங்குல விட்டத்தையும் கொண்டிருக்கும்.
- மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் மூடப்பட்டு கட்டையுடன் தோலை இழுத்துக் கட்டுவது வார் ஆகும்.
- வாத்தியத்தின் சுருதி வாரின் இறுக்கத்தில் தங்கியுள்ளது. வலந்தலை 3 வளையங்களாக தோல் பொருத்தப்பட்டிருக்கும்.
- “மீட்டுத் தோல்” என்னும் வெளி வளையமானது கன்றுக்குட்டியின் தோலினாலும் “சாபு தோல்” எனப்படும் வெளி வளையமானது ஆட்டுத் தோலினாலும் செய்யப்பட்டிருக்கும்.
- மையத்தில் காணப்படும் கருப்பு பசையானது சோறு, கரணை, மருந்து என அழைக்கப்படும்.
- மிருதங்கத்திற்கு கணீர் என்ற ஓசைக் கொடுக்கும் மையப் பகுதியானது தற்காலிகமாகவும் ரவையும், தண்ணீரும் கலந்து “சுஜி” என்ற கலவை பூசப்படுகின்றது.
- இவ்வாறு அமைக்கப்பட்ட இவ்வாத்தியம் ஆனது நடனக் கச்சேரிகளின் போது உபயோகிக்கப்படுகின்றது.
- நடனக் கச்சேரிகளில் நடனத்திற்கு மேலும் மெருகூட்டுவதும் பாடகரின் பாடலை தொனிக்கேற்ப பொலிவுப் பெறச் செய்வதற்கும் உதவுகிறது.
- நடனத்தில் இடம்பெறும் ஜதிச் சொற்கட்டுக்கட்டுக்களை மிருதங்கத்தில் வாசிக்கும் போது நாட்டியக் கச்சேரி மேலும் மெருகூட்டப்படுகின்றது.
- நாட்டியக் கச்சேரியில் இடம்பெறும் நடை வேறுபாடுகளைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவதற்கு இவ்வாத்தியம் துணை புரிகின்றது.
- நட்டுவாங்கத் தாளத்துடன் மிருதங்கமும் இணைந்து எழும் ஓசையானது நடனம் ஆடுபவரையும் பார்வையாளர்களையும் மெய்மறக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

  (விடைக்கேற்ப புள்ளிகள் வழங்குக)

(05 புள்ளிகள்)

iii.




(05 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

**7.** நீர் பார்த்து இரசித்த நாட்டிய நாடகம் ஒன்றினை **நான்கு** விதமான அபிநயங்களினூடாக விளக்குக.

- நடனம், நாடகம் ஆகியவற்றின் ஊடாக ஒரு கதையை பார்வையாளர்களுக்கு எடுத்துக்கூறுவது நாட்டிய நாடகம் எனப்படும்.
- இதில் கதை அல்லது கருப்பொருள் அபிநயத்தின் மூலம் விளக்கப்படும்.
- கதாபாத்திரத்திற்குப் பொருத்தமான ஆடை, ஒப்பனை, அபிநயம், அலங்காரம் செய்து காலில் சலங்கைக் கட்டி ஆடுவார்கள்.
- நவரசமும் பிரதிபலிக்கும் முகமாக நாட்டிய நாடகம் காணப்படும்.
- பல்வேறு வகையான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும்.

**ஆங்கீக அபிநயத்தை எடுத்துக்கொண்டால்......**

- உதாரணமாக பாசுபதாஸ்திர நாட்டிய நாடகத்தில் ஆங்கிக அபிநயத்தை எடுத்துக் கொண்டால் உடல் உறுப்புக்களால் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துவது ஆங்கிக அபிநயம் எனப்படும்.
- உடல் உறுப்புக்கு தனித் தனிச் செய்கைகள் உண்டு.
- பாடலில் அல்லது நாட்டியத்தின் பொருளை கைமுத்திரைகள் காட்டுகின்றன.
- கைமுத்திரைகள் வழியாக கண் செல்லும், கண் செல்லும் வழியாக மனம் செல்லும், மனம் செல்லும் வழியாக உள்ளத்தின் உணர்வுகள் செல்லும் இவ்வாறு குறிப்பிடப்பட்ட பாத்திரத்தின் உணர்வு ஆங்கீக அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

**வாச்சிக அபிநயத்தை எடுத்துக்கொண்டால்......**

- பாடலுக்கு ஏற்ப அபிநயிப்பது வாச்சிக அபிநயம் எனப்படும். இந்த அபிநயத்திற்கு பாடல் முக்கியம்.
- பாடற் பொருள் ஆங்கீக அபிநயம், சாத்வீக அபிநயத்தின் மூலம் அபிநயிக்கப்படும்.
- முற்காலத்தில் ஆடுபவரே பாடலைப்பாடி அபிநயிப்பார். தற்காலத்தில் வேறோருவர் பக்கப் பாட்டுப் பாட ஆடுபவர் அதற்கேற்ப அபிநயம் செய்து ஆடும் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

**ஆகார்ய அபிநயத்தை எடுத்துக்கொண்டால்......**

- அலங்காரம் மூலம் அபிநயத்தல் ஆகார்ய அபிநயம் எனப்படும்.
- முக ஒப்பனை, உடை அணி, அலங்காரம், ஆடை அமைப்பு முதலியவை நாட்டிய நாடகத்தில் முக்கிய இடம் பெறுகின்றன.

  உதாரணமாக சிவனாக ஒருவர் ஆட வேண்டும் என்றால் அவர் சடாமுடி, பிறைச்சந்திரன், பாம்பு, புலித்தோல், நெற்றியில் திருநீறு முதலான ஒப்பனைகளைச் செய்துக் கொள்ளல் வேண்டும். இந்த ஒப்பனைகள் அவரை சிவனாக உணர்த்தும். இவ்வாறு அபிநயம் செய்வது ஆகார்ய அபிநயம் ஆகும்.

**சாத்வீக அபிநயத்தை எடுத்துக்கொண்டால்......**

- நவரசம் எனப்படும் 9 சுவைகளாகிய பயம், வீரம், இளிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, கோபம், நடுநிலை ஆகிய உணர்வுகளை கைமுத்திரைகள், முகபாவம் போன்ற உடல் மெய்பாடுகளால் அபிநயித்தல் சாத்வீக அபிநயம் எனப்படும்.
- கண்கள் உடல் அசைவு, உடல் நிலை கைமுத்திரைகள், முகபாவம் ஆகியவற்றால் அபிநயித்தல் சாத்வீக அபிநயம் ஆகும்.

  உதாரணமாக அச்சம் ஏற்படும் போது உடல் வியர்க்கும், உடல் நடுங்கும், கண்கள் சொருகும் இத்தகைய மெய்ப்பாடுகளை ஆடலில் காட்டுதல் சாத்வீக அபிநயம் ஆகும்.

(12 புள்ளிகள்)

(விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்)

# 10 සහ 11 ශ්‍රේණි සඳහා ග්‍රන්ථ නාමාවලිය

## (අ.පො.ස) සාමාන්‍ය පෙළ
## 11 ශ්‍රේණිය - කෙටි සටහන්

**සිංහල මාධ්‍ය**

- [ ] 10-11 සිංහල ව්‍යාකරණ
- [ ] 10-11 සිංහල සාහිත්‍යය රසාස්වාදය
- [ ] බුද්ධ ධර්මය
- [ ] කතෝලික ධර්මය
- [ ] සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- [ ] සිංහල සාහිත්‍යය සංග්‍රහය
- [ ] English Language
- [ ] ගණිතය - 1
- [ ] ගණිතය - 2
- [ ] ජීව විද්‍යාව
- [ ] භෞතික විද්‍යාව
- [ ] රසායන විද්‍යාව
- [ ] ඉතිහාසය
- [ ] ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
- [ ] භූගෝල විද්‍යාව
- [ ] පුරවැසි අධ්‍යාපනය
- [ ] පෙරදිග සංගීතය
- [ ] නර්තනය
- [ ] නාට්‍ය හා රංග කලාව
- [ ] චිත්‍ර කලාව
- [ ] තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය
- [ ] සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය
- [ ] සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
- [ ] කෘෂි හා ආහාර තාක්ෂණය
- [ ] ගෘහ ආර්ථික විද්‍යාව

## 11 ශ්‍රේණිය - ප්‍රශ්නෝත්තර

**සිංහල මාධ්‍ය**

- [ ] සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- [ ] බුද්ධ ධර්මය
- [ ] ඉතිහාසය
- [ ] ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
- [ ] පුරවැසි අධ්‍යාපනය

## Grade 11 - Short Notes

**English Medium**

- [ ] Buddhism
- [ ] Mathematics - 1
- [ ] Mathematics - 2
- [ ] Biology
- [ ] Physics
- [ ] Chemistry
- [ ] History
- [ ] Business & Accounting Studies
- [ ] Geography
- [ ] Civic Education
- [ ] ICT
- [ ] Health & Physical Education
- [ ] 10-11 English Literary (Poetry)
- [ ] 10-11 English Literary (Drama)
- [ ] 10-11 English Literary (Short Story)

## Grade 11 - Model Papers

**English Medium**

- [ ] Civic Education

## 10 ශ්‍රේණිය - කෙටි සටහන්

**සිංහල මාධ්‍ය**

- [ ] බුද්ධ ධර්මය
- [ ] කතෝලික ධර්මය
- [ ] සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- [ ] සිංහල සාහිත්‍යය සංග්‍රහය
- [ ] සිංහල රචනා අත්වැල
- [ ] English Language
- [ ] ගණිතය - 1
- [ ] ගණිතය - 2
- [ ] ජීව විද්‍යාව
- [ ] භෞතික විද්‍යාව
- [ ] රසායන විද්‍යාව

## Grade 10 - Short Notes

**English Medium**

- Buddhism
- Mathematics - 1
- Mathematics - 2
- Biology
- Physics
- Chemistry
- History
- Business & Accounting Studies - 1
- Business & Accounting Studies - 2
- Geography
- Civic Education
- ICT
- Health & Physical Education

- ඉතිහාසය
- ඉතිහාසය රූප සටහන් අශ්‍රිත කෙටි සටහන්
- ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - 1
- ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - 2
- භූගෝල විද්‍යාව
- පුරවැසි අධ්‍යාපනය
- පෙරදිග සංගීතය
- නර්තනය
- නාට්‍ය හා රංග කලාව
- චිත්‍ර කලාව
- තොරතුරු හා සන්නිවේදන තාක්‍ෂණය
- සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය
- සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
- කෘෂි හා ආහාර තාක්ෂණය
- ගෘහ ආර්ථික විද්‍යාව
- ජපන් භාෂාව

## 10 ශ්‍රේණිය - ප්‍රශ්නෝත්තර

**සිංහල මාධ්‍ය**

- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- බුද්ධ ධර්මය
- ගණිතය
- විද්‍යාව
- ඉතිහාසය
- පුරවැසි අධ්‍යාපනය
- භූගෝල විද්‍යාව
- පෙරදිග සංගීතය

## පාඩමෙන් පාඩමට මාසික ඇගයීම්

**සිංහල මාධ්‍ය**

- 10-ශ්‍රේණිය - විද්‍යාව
- 11-ශ්‍රේණිය - විද්‍යාව

## Grade 10 - Model Papers

**English Medium**

- Mathematics
- Science
- Civic Education
- Geography
- English Activity Book
- English Work Book

## අනෙකුත් ග්‍රන්ථ

- හෙළදිව කතිකාවත
  - අරුණශාන්ත අමරසිංහ
- හොල්මන් අවතාර සහ යකඳුරන්
  - අරුණශාන්ත අමරසිංහ
- සිසු-ගුරු අත්පොත නාට්‍ය හා රංග කලාව 10-11 ශ්‍රේණි සඳහා (නව විෂය නිර්දේශය) - නන්දන අල්ගේවත්ත

සියලු ම ශ්‍රේණි සඳහා කෙටි සටහන්, ප්‍රශ්න පත්‍ර කට්ටල සහ වැඩ පොත් අප සතුව තිබෙන අතර, මෙම ඕනෑම ග්‍රන්ථයක් වට්ටම් සහිත ව ඔබේ නිවසට ම ගෙන්වා ගත හැකි ය.